**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்விஅலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 555 /ஆ4/2020, நாள் 05.01.2021**
**- - -**

பொருள் : பள்ளிக்கல்வி – மேல்நிலை 2ஆம் ஆண்டு பொதுத்தேர்வு நடத்துதல் சார்ந்து கருத்து கேட்டறிதல் – சார்பு.

பார்வை : சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்34462/பிடி1/இ1/2020, நாள் 02.06.2021

- - -

கோவிட் -19 பெருந்தொற்று காரணமாக 2020-21ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மே மாதத்தில் நடத்தப்பட இருந்தது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது 07.06.2021 முடிய ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. இச்சூழ்நிலையில் மாணவர்களுக்கு மேல்நிலை இரண்டாம் ஆண்டிக்கான பொதுத்தேர்வு நடத்துவது குறித்து **மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் கருத்துக்களை கையொப்பத்துடன் பெற்று** தொகுத்து வேலூர் முதன்மைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கும் வகையில் தயார் நிலையில் வைக்கும்படியும், அவ்வாறு பெற்ற கருத்துக்களை Scan செய்து உடனடியாக நாளை (03.06.2021) பிற்பகல் 1.00 மணிக்குள் ceovlr3@gmail.com என்ற மின் அஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படியும் அனைத்து அரசு/நகரவை/ஆதிதிராவிடர்நல/ அரசு நிதியுதவி/சுயநிதி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்துவகை மேல்நிலைபள்ளி தலைமையாசிரியர்கள்/
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர்கள்

நகல்
சென்னை-6 பள்ளிக்கல்வி ஆணையர்
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.